# இலங்கையின் நிதியியல் அறிவு வழிகாட்டல் (2024 - 2028)

## தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயத்திட்டத்தின் கீழான முன்னெடுப்பு



"நிதியியல் ரீதியாக அறிவுடைய இலங்கையை நோக்கி"


ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

# பாராட்டுதல்கள்

தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் சபையினதும் தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயத்தின் முகாமைத்துவக் குழுவினதும் வழிகாட்டலின் கீழ் 40 இற்கும் மேற்பட்ட தேசிய மட்டத்திலான ஆர்வலர்களின் ஒத்துழைப்புடன் இலங்கையின் நிதியியல் அறிவு வழிகாட்டல் உருவாக்கப்பட்டுள்ளது.

வழிகாட்டலை உருவாக்குகின்ற கட்டத்தில், பன்னாட்டு நிதிக் கூட்டுத்தாபனம் - வெளிநாட்டு அலுவல்கள் மற்றும் வர்த்தகத் திணைக்களத்தின் மகளிர் வேலைத் திட்டத்தின் கீழ் அவுஸ்திரேலிய அரசாங்க ஆதரவுடன் பன்னாட்டு நிதிக் கூட்டுத்தாபனம், ஆர்வலர் துறைசார் பகுப்பாய்வு மற்றும் சாத்தியமான அபிவிருத்திக்கான செயற்பாட்டை முன்னெடுப்பதற்கு தொழில்நுட்ப மற்றும் நிதியியல் உதவியை வழங்கி, தொடக்க ஆர்வலர் ஆலோசனை செயலமர்வினை வசதிப்படுத்தியதுடன் நிதியியல் அறிவு வழிகாட்டலின் தொடக்க வரைவினை மீளாய்வுசெய்தது.

நிதியியல் வசதிக்குட்படுத்தலுக்கான கூட்டமைப்பு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களும் தொழில்நுட்ப கூட்டங்கள் நடாத்தப்பட்டதுடன் நிதியியல் அறிவு மற்றும் தொடர்புடைய விடயப்பரப்புகள் பற்றிய நிதியியல் வசதிக்குட்படுத்தலுக்கான கூட்டமைப்பின் அறிவுசார் உற்பத்திகளும் இவ்வழிகாட்டலின் உருவாக்கத்திற்கு நன்மைபயப்பனவாக அமைந்திருந்தன.

ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம், மத்திய வங்கியுடனான அவர்களின் முறையான ஒத்துழைப்பின் பாகமொன்றாக, வழிகாட்டலை வடிவமைத்தல் மற்றும் அச்சிடுதல் உட்பட, நிதியியல் அறிவு வழிகாட்டலை அறிமுகப்படுத்துவதற்கான நிதி உதவியை வழங்கியிருந்தது.

# சுருக்கம்

| | |
|---|---|
| AFI | நிதியியல் வசதிக்குட்படுத்தலுக்கான அமைப்பு |
| CBSL | இலங்கை மத்திய வங்கி |
| FLSP | நிதியியல் அறிவுப் பணி வழங்குநர் |
| IBSL | இலங்கை வங்கியாளர் நிறுவகம் |
| IFC | பன்னாட்டு நிதிக் கூட்டுத்தாபனம் |
| NEDA | தேசிய தொழில்முயற்சியாண்மை அபிவிருத்தி அதிகாரசபை |
| NFIS | தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயம் |
| MoH | சுகாதார அமைச்சு |
| MoI | கைத்தொழில் அமைச்சு |
| MSMEs | நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் |
| MWCASE | மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சு |
| OTP | ஒரு தடவைக் கடவுச்சொல் |
| PIN | தனிப்பட்ட அடையாள இலக்கம் |
| QR | விரைவான பதிலிறுப்பு |
| RFSP | பதிவுசெய்யப்பட்ட நிதியியல் பணி வழங்குநர் |
| SLII | இலங்கை காப்புறுதி நிறுவகம் |
| ToT | பயிற்றுநர்களைப் பயிற்றுவித்தல் |
| UNDP | ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் |
| WBG | உலக வங்கிக் குழு |

# நாம் ஏன் இங்கேயுள்ளோம்?

2021இல், தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயத்தின் கீழ், இலங்கை மத்திய வங்கியானது உலக வங்கிக் குழுவின் பன்னாட்டு நிதிக் கூட்டுத்தாபனத்துடன் இணைந்து நாட்டின் பின்னணிக்கேற்றவாறான பன்னாட்டு முறையியலொன்றைப் பயன்படுத்தி, 4,800 வீட்டலகுகள் கொண்ட மாதிரியுடன் முதன்முதலில் தேசியளவில் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற இலங்கையில் நிதியியல் அறிவு அளவீட்டை நடாத்தியது.

இலங்கையின் நிதியியல் அறிவு தோற்ற அமைப்பை அடையாளங்கண்டு எல்லையை நிர்ணயிப்பதே இவ்வளவீட்டின் குறிக்கோளாகவிருந்தது.

இலங்கையர்களின் நிதிசார் அறிவாண்மை, நிதியியல் எண்ணப்பாங்குகள் மற்றும் நிதியியல் நடத்தை என்பவற்றை இவ்வளவீடு மதிப்பிட்டது. கிடைக்கப்பெற்ற பதிலிறுப்புக்களை அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொரு பண்புக்கூறுக்கும் புள்ளி குறித்தொதுக்கப்பட்டது.

ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில், இலங்கையரின் நிதிசார் அறிவாண்மை திருப்திகரமான மட்டங்களில் காணப்படுகின்ற அதேவேளை அவர்களின் நிதியியல் நடத்தை பின்தங்கியே காணப்படுகின்றது என்பதை நிதியியல் அறிவு அளவீட்டின் பெறுபேறுகள் எடுத்துக்காட்டியுள்ளன.


நிதியியல் அறிவு மட்டங்களை அதிகரிப்பதற்கான ஆர்வலர்களின் பல தசாப்த காலமான நீண்ட முயற்சிகளுக்கு இலங்கையரின் கணிசமான நிதிசார் அறிவாண்மை மட்டம் காரணமாக அமைந்திருக்கக்கூடும். எவ்வாறாயினும், சாதகமான நிதியியல் நடத்தையை தூண்டுவதற்கு போதியளவு கவனம் செலுத்தப்படவில்லை. மறுபுறத்தில், ஆர்வலர்களின் இம்முயற்சிகள் துண்டாடப்பட்டு பொருளாதாரம் முழுவதும் சிதறியடிக்கப்பட்டுள்ளன. இதனால், பொருத்தமான கொள்கை வழிகாட்டல் வழங்கப்படின் இம்முயற்சிகளின் செயல்திறன்வாய்ந்ததன்மையை பன்மடங்காக்க முடியும்.


அடுத்துவரும் சில பக்கங்களும் இலங்கையின் நிதியியல் வசதிக்குட்படுத்தலினதும் நிதியியல் அறிவு தோற்ற அமைப்பினதும் நிழற்படங்களை வழங்கும்.

# நிதியியல் வசதிக்குட்படுத்தல் தோற்ற அமைப்பு - 2021

## பெறுவழி

### கணக்கு வைத்திருப்போர் (ஏதேனும் கணக்கு) (15 + வயதின் சதவீதமாக)





**65.8%**

கொண்ட தெற்காசிய சராசரியுடன் ஒப்பிடுகையில், இலங்கையில் 89.3 சதவீதமான பெண்கள் கணக்கு வைத்திருக்கின்றனர்.


### கணக்கு வைத்திருப்போர் (ஏதேனும் கணக்கு) (15 + வயதின் சதவீதமாக)





பிராந்திய மற்றும் வருமான சக குழுக்களுடன் ஒப்பிடுகையில் இளையோர் (15-24 வயதினர்) கணக்குடையோர் உயர்வாகக் காணப்படுகின்றனர்.




### செல்லிடத்தொலைபேசி பண கணக்கு உடமையாளர்கள் (15 + வயதின் சதவீதமாக)




### நிதியியல் நிறுவனத்தில் கணக்கு வைத்திருப்பவர்கள் (15 + வயதின் சதவீதமாக)





35.2 சதவீதம் கொண்ட நிதியியல் நிறுவனங்களில் கணக்கு உடமையாளர்கள் சம்பளமொன்றை அல்லது அரச கணக்கைப் பெற்றுக்கொள்வதற்கு முதலாவது கணக்கைத் திறந்துள்ளனர்.

# பயன்பாடு

## மேற்கொள்ளப்பட்ட அல்லது கிடைக்கப்பெற்ற கொடுப்பனவுகள் (15+ வயதின் சதவீதமாக)

**55%**

சதவீதமான வயதுவந்தோர் ஒரு வருடத்திற்குள் டிஜிட்டல் கொடுப்பனவுகளை மேற்கொண்டு அல்லது பெற்று 2017 இலிருந்து 17 சதவீத அதிகரிப்பை குறித்து காட்டியுள்ளனர்







**47.5%**

ஏறத்தாழ, இலங்கைப் பெண்களின் அரைப்பகுதியினர் ஒருவருடத்திற்குள் டிஜிட்டல் கொடுக்கல்வாங்கலொன்றை மேற்கொண்டுள்ளனர்

கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்று இலங்கையரின் டிஜிட்டல் நிதி நடத்தைக்கு சாதகமாக செல்வாக்குச் செலுத்தியுள்ளது

| | உலகளாவிய நோய்த்தொற்றுக் காலப்பகுதியில் முதலாவது உபயோகப்பட்டியல் கொடுப்பனவை செலுத்தியோர் | உலகளாவிய நோய்த்தொற்றுக் காலப்பகுதியில் முதலாவது டிஜிட்டல் ரீதியான வணிகருக்கு கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டது |
|---|---|---|
| இலங்கை | 16.9% | 9.6% |
| தெற்காசியா | 7.7% | 6.3% |
| குறைந்த மற்றும் நடுத்தரளவு வருமானம் | 7.1% | 6.5% |

## பணத்தை சேவையகப்படுத்தல் அல்லது சேமித்தல் (15 + வயதின் சதவீதமாக)




ஏதேனும் பணமாகச் சேமிக்கப்பட்டவை

**51%**

பண முகாமைத்துவத்திற்காக கணக்கொன்றைப் பயன்படுத்தியோர்

கணக்கொன்றைப் பயன்படுத்திச் சேகரிக்கப்பட்டவை

**11.7%**

சேமிப்புக் கழகமொன்றை அல்லது குடும்பத்திற்கு வெளியே ஆளொருவரைப் பயன்படுத்திச் சேமித்தோர்

## கடன்பெறுகை (15 + வயதின் சதவீதமாக)

இலங்கை ஏதேனும் மூலங்களிலிருந்து ஏதேனும் பணத்தை 41.9 சதவீதக் கடனாகப் பெற்று சக நாடுகளுக்கு இணையாக காணப்படுகின்றது சக நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கையரின் முறைசார் கடன்பெறுகை நடத்தை முன்னணியில் இருப்பதாகத் தெரிகின்றது


| இலங்கை | தெற்காசியா | குறைந்த மற்றும் நடுத்தரளவு வருமானம் |
|---|---|---|
| 22% | 12% | 13% |

**48%**

சதவீதமானோர் கடன்பெறுநர்கள் முறைசாரா கொடுகடன் மூலங்களில் தங்கியுள்ளனர்


மூலம்: *Global Findex 2021*

# நிதியியல் வசதிக்குட்படுத்தல் தோற்ற அமைப்பு - 2021





* எஸ் அண்ட் பி உலகளாவிய நிதியியல் அறிவு அளவீடு 2014

**58%** பாலின இடைவெளியுடன் கூடிய நிதியியல் அறிவு வீதம்




நிதிசார் அறிவாண்மை, எண்ணப்பாங்குகள் மற்றும் நடத்தை என்பவற்றின் நியதிகளில் இலங்கையர்களின் நிதியியல் இயலாற்றலும் அளவீட்டினால் மதிப்பீடு செய்யப்பட்டது




உயர்ந்த மட்டத்திலான நிதிசார் அறிவாண்மையுடன் ஒப்பிடுகையில் இலங்கையர்களின் நிதியியல் நடத்தை குறைவானதாகும்

| கூறு | உயர்ந்தபட்ச சாத்தியமான புள்ளி | சராசரியாக அடையப்பட்ட புள்ளி | குறைந்தபட்ச இலக்குப் புள்ளி |
|---|---|---|---|
| அறிவாண்மை | 07 | 5.03 | 05 |
| எண்ணப்பாங்கு | 05 | 2.65 | 03 |
| நடத்தை | 09 | 4.44 | 06 |
| ஒட்டுமொத்தப் புள்ளி | 21 | 12.12 | 14 |


www.cbsl.gov.lk இல் அளவீட்டு வெளியீடு கிடைக்கப்பெறுகின்றது

மேலே குறிப்பிடப்பட்டவற்றிலிருந்து, இலங்கையர்களின் நிதிசார் அறிவாண்மை சாதகமான நிதியியல் நடத்தைகளாக மாற்றுவதில் சிக்கலொன்றுள்ளதென்பதை நாம் அவதானிக்கலாம். தனிநபர்களின் நிதியியல் அறிவு நாட்டின் பொருளாதார வளர்ச்சியைத் தூண்டி ஊக்குவித்து ஆதரவளிக்கின்ற ஊக்கியாக காணப்படுவதனால் இக்குறைப்பாட்டை தேசிய மட்டத்தில் தீர்த்துவைக்கப்பட வேண்டும்.

இதற்கமைய, பரந்தளவான மக்கள் மத்தியில், மேம்பட்ட நிதியியல் அறிவு மட்டங்களினூடாக அதிகளவான நிதியியல் வசதிக்குட்படுத்தல் மட்டங்களை அடைவதற்கு பொருத்தமான கருவியொன்றாக தேசியளவிலான நிதியியல் அறிவு முன்முயற்சி கருத்திற்கொள்ளப்படலாம்.

# முன்னுரை

இலங்கையில் முதற்றடவையாக, தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயத்தின் நிதியியல் அறிவையும் இயலாற்றலையும் கட்டியெழுப்புகின்ற தூணிற்கு கீழே உருவாக்கப்பட்ட இலங்கையின் **நிதியியல் அறிவு வழிகாட்டலானது (வழிகாட்டல்) இலங்கையர்களின் நடத்தையை முன்னேற்றி அவர்களின் நிதியியல் இயலாற்றல்களை மேம்படுத்துதல்** எனும் தனியொரு கொள்கைக் குறிக்கோளை நோக்கி நகர்வதற்கு அனைத்து நிதியியல் அறிவு ஆர்வலர்களுக்கும் சான்றடிப்படையிலான வழிகாட்டலை வழங்குகின்றது.




**வரைபடம் 1 - நிதியியல் அறிவு வழிகாட்டல் உருவாக்கப்பட்டுள்ள தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயத்தின் உபாய ரீதியான கட்டமைப்பு**

இவ்வழிகாட்டலின் உருவாக்கமானது, இலங்கை மத்திய வங்கியின் தலைமையில் இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தில் தாபிக்கப்பட்டுள்ள தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயச் செயலகத்தினூடாக பல்துறை ஆர்வலர்களின் முயற்சியாக அமைந்தது.

நிதியியல் வசதிக்குட்படுத்தல், நிதியியல் வாடிக்கையாளர் பதுகாப்பு அத்துடன் முன்னேற்றமடைந்த நிதியியல் நடத்தை மற்றும் நீண்ட காலத்தில் இலங்கையர்களின் ஒட்டுமொத்த நிதியியல் இயலாற்றல் என்பவற்றினூடாக நிதியியல் உறுதிப்பாட்டிற்கு ஆதரவளிக்கும் பரந்தளவான நோக்குடன், இவ்வழிகாட்டல் உருவாக்கப்பட்டுள்ளது. இலங்கையரின் நிதியியல் சந்தையில் ஏற்கனவே காணப்படுகின்ற பல்வேறு வகையான உற்பத்திகள் பற்றி அறிந்த மற்றும் பொறுப்பு மிக்க பயன்பாட்டினை மனதில் பதியச் செய்வதனையும் ஒட்டுமொத்தமாக முன்மதியுடைய மற்றும் நிதியியல் நடத்தையினையும் இது வளர்க்க உதவுகின்றது.

எதிர்கால தலைமுறையினரின் நடத்தையை வடிவமைப்பதற்கான தேவையை இவ்வழிகாட்டல் அடையாளங்காண்கின்ற அதேவேளை இன்றைய சூழலில் தமது பொருளாதார மற்றும் நிதியியல் தெரிவுகளை மேற்கொள்ளும் வயதுவந்தவர்களின் நடத்தையிலும் தாக்கம் செலுத்துகின்றது.

நிதியியல் அறிவு ஆர்வலர்களின் மூலம் இணங்கி ஒழுங்கமைக்கப்பட்ட நடவடிக்கைகள் அதேபோன்று வழிகாட்டலை தொழிற்படச் செய்வதற்கான அவற்றின் நிறுவன ரீதியான வகிபாகங்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பவற்றை கூட்டிணைத்து வழிகாட்டலின் கீழ் அனைத்தையும் உள்ளடக்கி நடவடிக்கைத் திட்டமொன்று உருவாக்கப்பட்டுள்ளது.

## இலங்கையின் நிதியியல் அறிவின் நிபுணரான

# Mr. Beewise

## என்பவரை அறிமுகப்படுத்தல்

தேனீயானது பொதுவாக அனைத்து இலங்கை கலாச்சாரங்களிலும் விடாமுயற்சி, கடின உழைப்பு மற்றும் அர்ப்பணிப்புள்ள சேமிப்பாளராகக் கருதப்படுகிறது.
சொத்து மற்றும் நிலைபெறுதன்மையின் கருத்துக்களுடன் தேனீ இணைக்கப்பட்டுள்ளது.
நாம் ஊக்குவிப்பதற்கு முயற்சிக்கின்ற நிதியியல் அறிவு சாராம்சத்தை தேனீயின் நடத்தை கட்சிதமாக அடையாளப்படுத்துவதால் Mr. Beewise என்பவர் நிதியியல் அறிவு வழிகாட்டலின் அடையாளமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்



## அறிவாண்மை மற்றும் திறன்கள்

தேனீக்கள், அன்றாட வாழ்க்கையை விவேகத்துடன் வழிநடத்தும் நோக்கில் வளங்களைத் தேடுவதிலும் பயன்படுத்துவதிலும் திறமையான மதிப்புமிக்க அறிவாண்மையை எடுத்துக்காட்டுகின்றன. தேனீக்கள் பூவிலிருந்து பூந்தேனை சேகரித்துத் தேனடையில் தேனாகச் சேகரிப்பதில் காட்டும் திறன்களானது நிதியியல் திட்டமிடல், சேமிப்பு, முதலீடு மற்றும் கடனை நிர்வகித்தல் போன்ற தேவையான நடைமுறை திறன்களைப் பிரதிபலிக்கின்றன.

## எண்ணப்பாங்கு

தேனீக்கள் தங்கள் பணிகளில் குறிப்பிடத்தக்க விடாமுயற்சியையும் அர்ப்பணிப்பையும் காட்டுகின்றன. சரியான அணுகுமுறையே தனிப்பட்ட நிதியின் முன்னேற்றத்திற்கான மூலக்கல்லாகும். தேனீ தனது கடமைகளில் நிலைத்திருப்பது நிதி இலக்குகளை அடைவதற்கும் தடைகளை கடப்பதற்கும் தேவையான எண்ணப்பாங்கை எடுத்துக்காட்டுகிறது.

## நடத்தை

தேன் கூட்டைக் கட்டுவதற்கான தமது கூட்டுமுயற்சியில் தேனீக்களால் எடுத்துரைக்கப்பட்டவாறு நடத்தையானது ஒழுக்கமான மற்றும் பொறுப்பான நிதி நடத்தையின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது. தேன்கூட்டின் நல்வாழ்வுக்காக தேனீக்கள் ஒன்றிணைந்து செயற்படுகின்றமையானது ஒழுக்கமான சேமிப்பு, விவேகமான செலவு மற்றும் நிதித் திட்டமிடல் ஆகியவை ஒட்டுமொத்த நிதி ஆரோக்கியம் மற்றும் சமூகச் செழிப்புக்கு எவ்வாறு பங்களிக்கின்றன என்பதை விளக்குகிறது.

# தொழிற்படு வரைவிலக்கணங்கள்


## நிதியியல் இயலாற்றல்

கருத்திற்கொள்ளப்பட்ட சமூகப் பொருளாதார மற்றும் சூழல்சார்ந்த நிலைமைகளுக்கமைவாக தமது தனிப்பட்ட மற்றும் குடும்ப நிதிகள் தொடர்பில் நன்கு அறிந்ததும் பொறுப்புவாய்ந்ததுமான நிதியியல் தீர்மானங்களையும் சரியான நடவடிக்கைகளையும் மேற்கொள்வதற்கு **நிதிசார் அறிவாண்மை, திறன்கள், எண்ணப்பாங்குகள் மற்றும் நடத்தை** என்பவற்றில் தனிநபர்களின் நம்பிக்கையும் தேர்ச்சிகளும் அவசியமானதாகும்.

**'நிதியியல் அறிவு' எனப் பொதுவாக அழைக்கப்படுகின்றது**




பணவீக்கம், முதலீடுகளுடனும் கடன்பெறுகைகளுடனும் ஒருங்கிணைந்த எளிய மற்றும் திரண்ட வட்டி வீதங்கள் போன்ற அடிப்படை நிதியியல் எண்ணக்கருக்களை புரிந்துகொண்டு பிரயோகிப்பதற்கான இயலாற்றல்.




நிதிகள் பற்றியும் எதிர்காலத்திற்கான திட்டமிடல் பற்றியும் தனிநபரொருவரின் மனநிலை, அபிப்பிராயம் மற்றும் தீர்மானம்.




தனிப்பட்ட சூழ்நிலைகள் தொடர்பில் நிதியியல் தீர்மானங்களின் தாக்கத்தைப் புரிந்து பகுப்பாய்வு செய்வதற்கும் பண முகாமைத்துவம், குறுங்கால மற்றும் நீண்ட கால நிதியியல் இலக்குகள் அத்துடன் நிதியியல் உற்பத்திகள் பற்றிய விழிப்புணர்வு மற்றும் தெரிவு செய்தல் தொடர்பில் சரியான தீர்மானங்களை மேற்கொள்வதற்கும் அவசியமான நடத்தை மற்றும் திறன்கள்.

# கொள்கைக் கட்டமைப்பு

## இலங்கையின் நிதியியல் அறிவு வழிகாட்டல்

### தொலைநோக்கு

**நாம் எவற்றை அடைய வேண்டும்**

"நிதியியல் ரீதியாக அறிவுடைய இலங்கை"

### பணி

**நாம் எவ்வாறு எமது தொலைநோக்கை அடைகின்றோம்**

மக்களின் நிதியியல் நல்வாழ்வை அதிகரிப்பதற்கு **நன்கு அறிந்ததும் பொறுப்பு வாய்ந்ததுமான** நிதியியல் தீர்மானங்களை மேற்கொள்வதற்கு தேவையான **நிதியியல் அறிவாண்மைத் திறன்கள் மற்றும் நம்பகத்தன்மை** ஆகியவற்றுடன் பாரியளவான நிதியியல் வசதிக்குட்படுத்தலை நோக்கி அனைத்து இலங்கையர்களையும் வலுவூட்டல்

### உபாய ரீதியான முன்னுரிமைகள்

**நாம் முன்னுரிமைப்படுத்துகின்ற துறைகள் எவை?**

1. செயற்றிறன்வாய்ந்த ஒருங்கிணைப்பு மற்றும் ஒன்றிணைந்து செல்லும் உள்ளடக்கம்
2. அதிகரித்த சாதகமான நிதியியல் நடத்தை
3. விழிப்புணர்வுமிக்க மற்றும் பாதுகாக்கப்பட்ட நிதியியல் வாடிக்கையாளர்கள்
4. தலைமுறை ரீதியான நடத்தை மாற்றம்

### முக்கிய உள்ளடக்கங்கள்

**நாம் எவற்றை கற்பிக்கப் போகின்றோம்?**

1. பொருளாதார மற்றும் நிதியியல் சூழல்
2. டிஜிட்டல் நிதியியல் அறிவு
3. நிதியியல் முகாமைத்துவம்
4. வாடிக்கையாளர் பாதுகாப்பு

### தொழிற்பாட்டு ரீதியான தூண்கள்


**நாம் எவ்வாறு நடைமுறைப்படுத்தப் போகின்றோம்?**

1. உள்ளடக்கத்தை விருத்திசெய்து ஒன்றிணைத்தல்
2. விநியோக வழியை அடையாளங்கண்டு மாற்றியமைத்தல்
3. தலையீட்டை வடிவமைத்து நடைமுறைப்படுத்தல்
4. ஒருங்கிணைத்தல், கண்காணித்தல் மற்றும் மதிப்பீடுசெய்தல்

### இலக்கு குழுக்கள்

**யாருக்கு சேவையளிக்கப்படும்?**

1. இளையோர் மற்றும் பாடசாலை மாணவர்கள்
2. அடையாளங்காணப்பட்ட பாதிக்கப்படத்தக்க (பெண்கள், புலம்பெயர் தொழிலாளர்கள், வயதுவந்தோர், கிராமிய மக்கள்)
3. நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகள்
4. தொழில்சார் நிபுணர்கள் மற்றும் அரச ஊழியர்கள்




**வரைபடம் 2 - நிதியியல் அறிவு வழிகாட்டலின் முக்கிய கூறுகளுக்கிடையிலான இணைப்புகள்**


11

உபாய ரீதியான
முன்னுரிமை 01

# செயற்றிறன்வாய்ந்த ஒருங்கிணைப்பு மற்றும் ஒன்றிணைந்து செல்லும் உள்ளடக்கம்

## குறிக்கோள்கள்

- வழிகாட்டலை நடைமுறைப்படுத்துவதற்கு ஆளுகைக் கட்டமைப்பையும் ஒருங்கிணைப்பு பொறிமுறையையும் செயற்றிறன்வாய்ந்த விதத்தில் தொழிற்படுத்துதல்
- பொருத்தமான மாற்றியமைப்புக்களுடன் தற்போதுள்ள விநியோக வழிகளை அடையாளங்கண்டு பயன்படுத்துதல்
- பல்வேறு ஆர்வலர்கள் மூலம் மேற்கொள்ளப்படும் நிதியியல் அறிவு நிகழ்ச்சித்திட்டங்களுக்குப் பயன்படுத்தப்பட வேண்டிய உள்ளடக்கத்தை ஒரே சீராக நிறுவுதல்

இலங்கையில், பல்வேறு தனிநபர்களும் நிறுவனங்களும் நிதியியல் அறிவை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். அநேகமான தனிநபர்கள் தனிப்பட்ட நலன்களுக்கு மேலதிகமாக இந்நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர். ஆகையினால், நிறுவன மட்டத்தில் தமது இலக்கு குழுக்களின் நிதியியல் அறிவை முன்னேற்றுவதென்பது நிறுவன ரீதியான நிகழ்ச்சித்திட்டங்களின் வினைத்திறனை மேம்படுத்துவதற்கான பொறிமுறையொன்றாக பார்க்கப்படுகின்றது.

உதாரணமாக, அதிகளவான நிதியியல் இயலாற்றல்களைக் கொண்ட வாடிக்கையாளர்களை கொண்டுள்ள உரிமம்பெற்ற வங்கியொன்றில் பதிவுசெய்யப்பட்ட நிதியியல் பணி வழங்குநருக்கு அதன் நிதியியல் செயலாற்றத்தை முன்னேற்றுதல் முக்கியமானதாகின்ற அதேவேளை சமூக வலுவூட்டல் முயற்சிகளை கொண்டு நடாத்துகின்ற அரசாங்க அமைச்சானது முயற்சியின் செயற்றிறன்வாய்ந்த தன்மையை மேம்படுத்துவதற்கு நிதியியல் ரீதியான அறிவுடைய பெறுநர்களைக் கொண்டிருப்பதை முக்கியத்துவமிக்கதாக நோக்குகின்றது.

இதிலிருந்து இத்தகைய தனிநபர்களையும் நிறுவனங்களையும் “நிதியியல் அறிவு பணி வழங்குநர்கள்” என நாம் குறிப்பிடுவோம்.

இதுவரையிலும் இந்நிதியியல் அறிவு பணி வழங்குநர்கள் தாம் முக்கியமென எண்ணியவற்றை தமது இலக்கு குழுக்களுக்கு கற்பிப்பதில் கவனத்தைச் செலுத்தியுள்ளனர். பரந்தளவான பொருளாதார தாக்கத்தைக் கொண்டிருப்பதற்கு எவற்றைக் கற்பிக்க வேண்டும், எவ்வாறு கற்பிக்க வேண்டும், எத்தகைய விடயங்களில் கவனத்தைச் செலுத்த வேண்டும் மிகவும் பாதிக்கத்தக்க குழுக்கள் எவை என்பதை நெறிப்படுத்துவதற்கான வழிகாட்டல் எதுவும் பகிரங்கமாக கிடைக்கப்பெறவில்லை. மறுகரத்தில், நிதியியல் அறிவு பணி வழங்குநர்களுக்கு மத்தியில், குறைந்தளவான ஒருங்கிணைப்பு காணப்பட்டது அல்லது அறவே காணப்படவில்லை என்பதுடன் அவர்களின் முயற்சிகள் பொருளாதாரம் முழுவதும் அவ்வப்போது சிதறிக் காணப்பட்டு அவ்வாறான முயற்சிகளினதும் வளப் பயன்பாட்டினதும் செயற்றிறன்வாய்ந்த தன்மையை தடைப்படுத்தின.

இப்பின்னணியில், நாட்டிலுள்ள ஒவ்வொரு நிதியியல் அறிவு பணி வழங்குநரையும் அணுகுவதும் அவற்றின் நிதியியல் அறிவு தலையீடுகளை வடிவமைத்து வழங்குவதற்குமான பணிப்புரையை வழங்குவதும் நடைமுறைக்குச் சாத்தியமானதல்ல என்பதனால் பாரியளவிலான தேசிய மட்ட நிறுவன ரீதியான நிதியியல் அறிவு பணி வழங்குநர்களுக்கிடையில் செயற்றிறன்வாய்ந்த ஒருங்கிணைப்பு பொறிமுறைகளை நிறுவுவதை வழிகாட்டலின் முதலாவது உபாய முன்னுரிமை மையப்படுத்துகின்றது. இம்முன்னுரிமை உபாயத்தின் கீழ், வழிகாட்டலின் முக்கிய நிதியியல் அறிவு உள்ளடக்கங்களுக்கு அமைவாக ஒவ்வொரு இலக்கு குழுக்களுக்கும் வடிவமைக்கப்பட்ட பயிற்றுநர்களைப் பயிற்றுவித்தல் பாடத்தொகுதிகளையும் அனைத்தையுமுள்ளடக்கிய நிதியியல் அறிவு பாடவிதானத்தையும் வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கை முழுவதிலுமுள்ள நிதியியல் அறிவு பணி வழங்குநர்கள் இப்பொருட்களைப் பயன்படுத்தி இலங்கையர்களின் சாதகமான நிதியியல் நடத்தையை மேம்படுத்துவதை நோக்கி முன்னெடுக்கும் விதத்தில் இப்பொருட்கள் பகிரங்கமாக கிடைக்கத்தக்கதாகவிருக்கும்.

உபாய ரீதியான
முன்னுரிமை 02

# அதிகரித்த சாதகமான நிதியியல் நடத்தை

## குறிக்கோள்கள்


- இலங்கையர்களின் சாதகமான நிதியியல் நடத்தையை ஊக்குவித்தல்.
- டிஜிட்டல் கொடுப்பனவு முறைகளைப் பயன்படுத்துவதற்கு நிதியியல் வாடிக்கையாளர்களை வலுப்படுத்தி ஊக்குவித்தல்.
- தனிநபர்களுக்கும் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளுக்கும் மத்தியில் நிதியியல் முகாமைத்துவத்தையும் கணக்குப் பதிவு பேணும் பழக்கவழக்கங்களையும் ஊக்குவித்தல்.

நிதியியல் வசதிக்குட்படுத்தல் அளவீடு - 2021 இன் பெறுபேறுகளிற்கமைவாக, எமது பிராந்திய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கையர்கள் சிறந்த நிதியியல் அறிவுடன் காணப்படுகின்றனர். எவ்வாறாயினும், அத்தகைய நிதியியல் அறிவாண்மை சாதகமான நிதியியல் நடத்தைக்குள்ளாக அதன் முழுமையான உள்ளார்ந்தம் வரை மாறவில்லை எனத் தோன்றுகின்றது.

வழிகாட்டலின் இரண்டாவது உபாய முன்னுரிமையான - அதிகரிக்கப்பட்ட சாதகமான நிதியியல் நடத்தையானது காலப்போக்கில் மறந்துவிடாத சிறந்ததும் நிலைபெறத்தக்கதுமான நிதியியல் பழக்கங்கள் இலங்கையர்களின் மனதில் பதியச் செய்வதை மையப்படுத்துகின்றது.

சாதகமான நிதியியல் நடத்தைகள் கலாசாரத்தை அறிவூட்டுவதன் மூலம், இலங்கையர்களின் பொருளாதாரத்திலும் நிதியியல் நடத்தைகளிலும் மாறுதலடையக்கூடிய மாற்றமொன்றை நாம் எதிர்பார்க்கின்றோம். இத்தகைய ஒருங்கிணைந்த முயற்சிகள் தனிப்பட்டவர்களினதும் வியாபாரங்களினதும் பொருளாதார ரீதியாக தாக்குப்பிடிக்கும்தன்மையை பேணிவளர்க்குமெனவும் அதேபோன்று தேசத்தின் ஒட்டுமொத்த சுபீட்சத்திற்கும் உறுதிப்பாட்டிற்கும் பங்களிப்புச்செய்யுமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இக்குறிக்கோள்களை வெற்றிகரமாக மெய்ப்பிப்பதற்கு அரசாங்க முகவராண்மைகள், நிதியியல் நிறுவனங்கள், கல்விசார்ந்த நிறுவனங்கள், மற்றும் சமூக அமைப்புகள் என்பவற்றிக்கிடையிலான கூட்டிணைப்பு இன்றியமையாததாகும்.




நாம் ஒன்றிணைந்து, பொருளாதார பாதுகாப்பு மற்றும் வளர்ச்சியின் ஆதாரமாக முன்மதியுடைய நிதியியல் நடத்தை உருவாகின்ற சமூகத்தில் நிதியியல் ரீதியான அறிவைக் கொண்ட சமூகமொன்றை நாம் பேணிவளர்க்கலாம். முன்னோக்கிச் செல்கையில், எமது கூட்டாண்மை முயற்சியானது, நிதியியல் அறிவுக்கோட்பாடுகள் வெறுமனே கற்றுக்கொண்டவை மட்டுமன்றி அதன்படி வாழ்ந்து நிதியியல் ரீதியாக வலுப்படுத்தப்பட்டதும் சுபீட்சமானதுமான இலங்கையை நோக்கி குறிப்பிடத்தக்க படிமுறையொன்றை உறுதிசெய்வதாக அமையும்.

உபாய ரீதியான
முன்னுரிமை 03

# விழிப்புணர்வுமிக்க மற்றும் பாதுகாக்கப்பட்ட நிதியியல் வாடிக்கையாளர்கள்

## குறிக்கோள்கள்

- நிதியியல் வாடிக்கையாளர்களுக்கு பாதுகாப்பு, ஆபத்தின்மை மற்றும் பேணிக்காத்தல் தொடர்பில் விழிப்புணர்வை உருவாக்குதல்.
- தனிப்பட்ட கொடுகடன் தகவல்களின் முக்கியத்துவம் தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்தல்.


விழிப்புணர்வுமிக்கதும் பாதுகாக்கப்பட்டதுமான வாடிக்கையாளர்கள் பொருளாதாரத்திற்கும் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டிற்கும் இன்றியமையாதவர்களாக காணப்படுகின்றனர். அவர்களை வலுவூட்டல் போட்டிவாய்ந்ததும் புத்தாக்கமிக்கதும் மற்றும் வளர்ந்துவரும் பொருளாதாரச் சூழலுக்கு வழிவகுக்கின்றது. அவர்களின் விழிப்புணர்வு பொறுப்புவாய்ந்த தன்மையை ஊக்குவிப்பதுடன் நிதியியல் துறைக்குள் ஒழுக்கவியல்சார்ந்த நியமங்களை நிலைநிறுத்தி நம்பிக்கைக்கான அடித்தளத்தை கட்டியெழுப்புகின்றது.

விழிப்புணர்வுமிக்க வாடிக்கையாளர் எப்போதும் விழிப்பாகவிருந்து ஏதேனும் மோசடியான நடவடிக்கைகளிலிருந்தும் ஒழுக்கவிழுமியங்களற்ற நடத்தைகளிலிருந்தும் தம்மை பாதுகாப்பதற்கு அவர்களின் நிதியியல் கொடுக்கல்வாங்கல்களை உன்னிப்பாக கவனிப்பர். அவர்களது கவனமானது நிதியியல் நிறுவனங்களின் பரீட்சிப்பாகத் தொழிற்பட்டு அந்நிறுவனங்களின் ஒருமைப்பாட்டுடன் தமது தொழிற்பாடுகளை முன்னெடுக்கின்றன என்பதைத் தொழிற்படுத்துகின்றது.

வாடிக்கையாளர்கள் ஏதேனும் சந்தேகத்திற்கிடமான நடவடிக்கைகளை அறிக்கையிடும்போது, தவறான செயற்பாட்டிற்கெதிராக நிற்கும் போது நிதியியல் சந்தைகளின் தடையற்ற தொழிற்பாடு, முதலீட்டை ஈர்த்தல், அத்துடன் நீடித்துநிலைத்திருக்கும் பொருளாதார உறுதிப்பாடு என்பவற்றிற்கான முக்கிய கூறாக விளங்கும் நிதியியல் முறைமையில் நம்பிக்கையினையும் நம்பகத்தன்மையினையும் இது மீள வலுவூட்டுகின்றது.

வாடிக்கையாளர் பாதுகாப்பு வழிமுறைகள் பற்றிய காத்திரமான புரிந்துணர்வென்பது வாடிக்கையாளருக்கு மத்தியில் நம்பகத்தன்மை உணர்வினைப் பதிவுசெய்து அவர்களைப் பாதுகாக்கப்பட்டவர்களாக உணரச் செய்கின்றது.

நிதியியல் நடவடிக்கைகளில் பங்களிப்பை இது ஊக்குவித்து சாத்தியமான இடர்நேர்வுகளிற்கெதிராக பாதுகாக்கின்றது. இத்தகைய அம்சங்களின் முக்கியத்துவத்தை அங்கீகரித்தல், விழிப்பானதும் பாதுகாக்கப்பட்டதுமான நிதியியல் வாடிக்கையாளர்களைப் பேணிவளர்ப்பதை முன்னுரிமைப்படுத்தல் என்பன வழிகாட்டலின் வடிவமைப்பிற்கு முக்கியமாகவிருந்தது. இவ்வணுகுமுறையானது மிகவும் பாதுகாப்பானதும் சுபீட்சமானதுமான நிதியியல் எதிர்காலத்தை நோக்கி இலங்கையர்களுக்கு மத்தியில் நடத்தைசார்ந்த மாற்றத்தை வளர்ப்பதை நோக்காகக் கொண்டுள்ளன.



## உபாய ரீதியான முன்னுரிமை 04

# தலைமுறைசார்ந்த நடத்தை மாற்றம்

## குறிக்கோள்கள்

- பாடசாலை மாணவர்கள் தமது பாடசாலையை விட்டு விலகுகின்ற போது நிதியியல் ரீதியான இயலாற்றலைக் கொண்ட தனிநபர்களாக மாற்றமடைவதற்கு ஆதரவு வழங்குதல்.
- இளையோர் மத்தியில் சாதகமான நிதியியல் நடத்தையை புகட்டுதல்.

எமது இளைய தலைமுறையினரின் நிதியியல் அறிவை மேம்படுத்துதலென்பது எமது பொருளாதாரத்தின் வளர்ச்சிக்கு முக்கியத்துவம் வாய்ந்ததாகும். ஆரம்ப வயதுகளில் நிதியியல் கல்வியைத் தொடங்குவது தனிநபர்கள் தமது நிதிகள் பற்றியும் தமது வாழ்க்கை முழுவதும் அவர்களுக்கு நன்மைபயக்கின்ற வினைத்திறனான தெரிவுகள் பற்றியும் தெரிந்துகொள்கின்ற எதிர்காலத்தை கட்டியெழுப்ப உதவுகின்றது.

வரவு செலவுத்திட்டமிடல், சேமித்தல் மற்றும் முதலிடுதல் போன்று பணத்தைக் கையாளுவதின் அடிப்படைகளை கற்றுக்கொள்ளலானது அளவிற்கதிமான கடன்களைப் பெறுதல், தமது வளங்களைத் தவறாக கையாளுதல் போன்ற பொதுவான நிதியியல் வசதிகளைத் தவிர்ப்பதற்கான கருவிகளுடன் இளம் சமுதாயத்திற்கு வசதியளிக்கின்றது. இவ்வறிவு, தமது தனிப்பட்ட நிதியியல் நல்வாழ்விற்கு ஆதரவளிப்பதற்கு மாத்திரமல்லாமல் சமூக நலனோன்புகை முறைமைகளுக்கான சுமையைக் குறைத்து வலிமையானதும் மிகவும் சுயமாகத் தங்கியிருத்தலுக்குமான சமூகத்திற்கு பங்களிப்புச் செய்கின்றது.

மிக முக்கியமாக, நிதியியல் விடயங்களை எமது இளையோருக்கு கற்றுக்கொடுத்தல் பொருளாதர அபிவிருத்தியின் முக்கிய உந்துசக்திகளாக அமைகின்ற தொழில்முயற்சிக்கும் புத்தாக்கத்திற்கும் அத்திவாரமிடுகின்றது. சரியான நிதியியல் திறன்கள் மூலம் தமது தொழில்களை ஆரம்பிப்பதற்கு சிறந்த முறையில் இளையோர் தயாராகி இன்று இலங்கைக்கு மிக முக்கியமானதாக விளங்குகின்ற வேலை உருவாக்கத்திற்கு பங்களிப்புச்செய்து, பொருளாதார நடவடிக்கையைத் □ண்டுகின்றனர்.

நிதியியல் ரீதியாக அறிவுள்ள இளையோர், பொருளாதார வாய்ப்புக்களை கண்டறிந்து கைப்பற்றுவதில் மிகவும் திறமைவாய்ந்தவர்களாக காணப்படுவதுடன், புதுமையான தீர்வுகளிற்கும் பொருளாதாரத்தின் முன்னேற்றத்திற்கும் வழிவகுக்கின்றனர். பொருளாதார தோற்ற அமைப்பில் அவர்களின் முனைப்பான ஈடுபாடானது துடிப்பான தொழில்முயற்சியாண்மை கலாசாரமொன்றை ஊக்குவித்து பன்னாட்டு போட்டித்தன்மையை மேம்படுத்துகின்றது.

இந்நன்மைகளை இனங்கண்டு இலங்கையின் சிறுவர்களுக்கும் இளையோருக்குமிடையில் நிதியியல் அறிவை முன்னேற்றுவதில் அதிகளவான முன்னுரிமையை இவ்வழிகாட்டல் இடம்பெறச்செய்கின்றது. வாழ்நாள் முழுவதும் நிதியியல் திறன்களை அவர்களுக்கு வழங்குதல், சமூக நலன் மீது அவர்கள் சார்ந்திருப்பதைக் குறைத்தல் மற்றும் நிதியியல் ரீதியான சுயாதீன மற்றும் தாக்குபிடிக்கும் தன்மையைக் கொண்ட கலாச்சாரத்தை ஊக்குவித்தல் என்பவற்றிற்கு வசதியளப்பது இதன் இலக்காகும். புத்தாக்கம், தொழில்முயற்சியாண்மை மற்றும் பொருளாதார வளர்ச்சி ஆகியவற்றை நோக்கி தலைமுறையினைப் பேணி வருவதற்கு இவ்வழிகாட்டல் முனைகின்றது.

இவ்வழிகாட்டலானது நிதியியல் உலகை வினைத்திறனான விதத்தில் வழிநடாத்துவதற்கு தேவையான அறிவையும் கருவிகளையும் இளம் தலைமுறையினருக்கு வழங்கி பொருளாதார வாய்ப்புகளின் நன்மையைப் பெறுவதற்கு அவர்களை நிலைநிறுத்துவதற்கு உறுதிபூண்டுள்ளது. எமது இளையோர்களின் நிதியியல் கல்வியில் முதலீடு செய்வதன் மூலம், நாம் சுபீட்சமானதும் நிலைபெறத்தக்கதுமான எதிர்காலத்திற்கான திடமான அடித்தளத்தைக் கட்டியெழுப்புகின்றோம்.

சிறுவயதிலேயே பணம் தொடர்பாக அறிவதன் மூலம் குழந்தைகள் வெற்றியை நோக்கிச்செல்கின்றனர். பெரியவர்களான பிறகு, பணத்தை தமது தேவைகளுக்கேற்றவாறு கையாள்வது, எதிர்காலத்திற்கு சேமிப்பது, தமக்கான சுயதொழிலை ஆரம்பிப்பதற்கான உயர்ந்தளவான ஆற்றலைக் கொண்டிருத்தலென பணம் சார்ந்த விடயங்களை அறிந்து கொள்கின்றனர்.

இலங்கைக்கு தற்போது தேவைப்படுகின்ற புதிய ஆலோசனைகளையும் தொழில் வாய்ப்புக்களையும் இது வழங்குகின்றது. பணம் தொடர்பான அறிவினைக் கொண்டுள்ள இளையோருக்கு, புதிய செயலியொன்றை தொடங்குவதற்கு அல்லது புதிய தொழிலை ஆரம்பிப்பதற்கு அத்துடன் பொருளாதாரத்திற்கு புத்துணர்ச்சியான சக்தியையும் புத்தாக்கத்தையும் வழங்குவதற்கான வாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய சந்தர்ப்பங்களைக் கொண்டிருப்பர்.

# முக்கிய நிதியியல் அறிவு உள்ளடக்கங்கள்

வழிகாட்டலானது நிதியியல் அறிவு உள்ளடக்கத்தையும் வழிகாட்டல் ஆவணங்களையும் விருத்திசெய்யவும் ஒன்றிணைக்கவும் பயன்பட்டுள்ள நான்கு முக்கிய நிதியியல் அறிவு உள்ளடக்க துறைகள் மீது கவனம் செலுத்துகிறது.




**வரைபடம் 3 - நிதியியல் அறிவு வழிகாட்டலின் முக்கிய உள்ளடக்கங்கள்**

# முக்கிய நிதியியல் அறிவு உள்ளடக்கங்கள்

## நாம் எவற்றைக் கற்பிக்கவுள்ளோம்



நிதியியல் உலகம் எவ்வாறு தொழிற்படுகின்றது என்ற அடிப்படையை ஒவ்வொருவரும் புரிந்துகொள்வதை உறுதி செய்வதை நோக்காகக் கொண்டுள்ளது

### பொருளாதார மற்றும் நிதியியல் சூழல்

- நிதியியல் பணி வழங்குநர்களும் பணிகளும்
- அடிப்படை பேரண்டப் பொருளாதார எண்ணக்கருக்கள்
- நிதியியல் அதிகாரசபைகளின் வகிபாகம்
- நிதியியல் தகவல்களைப் பெறுதல் மற்றும் நிதியியல் பணிகளைத் தெரிவுசெய்தல்

கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு ஒவ்வொருவரும் வங்கித்தொழிலிலிருந்து டிஜிட்டல் நிதியியல் பணிகளை இலகுவாகவும் பாதுகாப்பாகவும் பயன்படுத்துகின்றனர் என்பதை உறுதிசெய்வதை முன்னேற்றுதல்

### டிஜிட்டல் நிதியியல் அறிவு

- டிஜிட்டல் நிதியியல் பணிகளுக்கான அறிமுகம்
- இணையத்தள வங்கித்தொழில்
- செல்லிடத்தொலைபேசி வங்கித்தொழில் செயலிகள்
- அட்டைக் கொடுப்பனவுகள்
- பாதுகாப்பு மற்றும் ஆபத்தின்மை



வரவு செலவுத்திட்டமிடுதலிலிருந்து சேமித்தல் மற்றும் முதலீடு செய்தல் வரை தமது நிதிகளை வினைத்திறனாக முகாமைசெய்கின்ற தனிநபர்களுக்கு உதவுவதன் மீது கவனத்தைச் செலுத்தல்

### நிதியியல் முகாமைத்துவம்

- வருமான ஈட்டல்
- சேமிப்புக்கள்
- வரவு செலவுத்திட்டமிடல்
- படுகடன் முகாமைத்துவம்
- முதலீடு
- காப்புறுதி
- வரி

நிதியியல் கொடுக்கல்வாங்கல்களில் தமது உரிமைகளையும் நலன்களையும் பாதுகாப்பதற்கு அறிவைக்கொண்டு தனிப்பட்ட வலுவூட்டுவதற்கு நாடுதல்

### நுகர்வோர் பாதுகாப்பு

- ஏமாற்றுதலையும் மோசடிகளையும் அடையாளங்காணுதல்
- இடர்நேர்வு மற்றும் ஆதாயம்
- ஒழுங்குவிதிகள் மற்றும் வாடிக்கையாளர் பாதுகாப்பு
- நிதியியல் கல்வி, தகவல்கள் மற்றும் ஆலோசனை
- உரிமைகள் மற்றும் பொறுப்புகள்







# முக்கிய நிதியியல் அறிவு உள்ளடக்கங்கள்

## வழங்கப்பட வேண்டிய செய்திகள் எவை?

நிதியியல் கல்வியின் முக்கிய கொள்கைகள், மைய எண்ணக்கருக்கள் மற்றும் குறிக்கோள்களைக் உள்ளடக்குகின்ற சுருக்கமானதும் துல்லியமானதுமான கூற்றுக்களாக நிதியியல் அறிவு பிரதான செய்திகள் காணப்படுகின்றன. அறிவிக்கப்பட்ட நிதியியல் தீர்மானங்களை மேற்கொள்வதற்கும் அவர்களின் நிதியியல் இலக்குகளை அடைவதற்கும் இச்செய்திகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. இவை இலக்கிடப்பட்ட குழுக்களுக்கென குறுகிய மற்றும் ஞாபகார்த்தமாக வைத்திருக்கக்கூடிய விதத்தில் நிதியியல் அறிவு தொடர்பான தலைப்புக்களை சாரம்சப்படுத்தி விருத்திசெய்வதற்கும் உதவுகின்றன.

வரைவிலக்கணம் செய்யப்பட்ட நிதியியல் அறிவு முக்கிய செய்திகளை வைத்திருத்தலானது நிதியியல் தலையீடுகளை நடைமுறைப்படுத்துவதற்கு முக்கியமானதாக காணப்படுகின்றது. ஏனெனில் அவை:

- செய்தியைப் பெறுபவருக்கு தெளிவுபடுத்தலையும் கவனம் செலுத்தலையும் வழங்குகின்றன.
- வெவ்வேறு தளங்கள் மற்றும் வழிகளுக்கிடையில் இயைபையும் ஒத்திசைவையும் உறுதிப்படுத்துகின்றன.
- காத்திரமான தொடர்பூட்டலுக்கான கட்டமைப்பொன்றாக தொழிற்படுகின்றன.
- நடத்தை ரீதியான மாற்றத்தில் செல்வாக்குச் செலுத்துவதில் முக்கிய வகிபாகமொன்றை வகிக்கின்றன.
- குறிப்பான அவையோருக்கு நிதியியல் அறிவு உள்ளடக்கத்தினை தேவைக்கேற்றவாறு வடிவமைத்து இலக்கிடுவதற்கு ஆதரவளிக்கின்றன.
- நிதியியல் அறிவு வழங்குநர்களுக்கான அளவீடு மற்றும் மதிப்பீடு தொடர்பில் அடிப்படையை வழங்குகின்றன.

ஆர்வலர்கள் தமது நிதியியல் அறிவு நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கப்பட்ட விதத்தில் வடிவமைத்து நடைமுறைப்படுத்தும் போது, முக்கிய உள்ளடக்கங்களுடனும் நிதியியல் அறிவு தலைப்புக்களுடனும் இசைந்துசெல்லும் விதத்தில் நிதியியல் அறிவு ஆர்வலர்களினால் நிதியியல் அறிவு முக்கிய செய்திகள் விருத்திசெய்யப்படும்.

சிந்திக்கமால் சேமியுங்கள், விழிப்புடன் செலவிடுங்கள்

முதலில் சேமியுங்கள் பிறகு செலவு செய்யுங்கள்

உங்களுடைய தனிப்பட்ட அடையாள இலக்கம் (**PIN**), ஒரு தடவைக் கடவுச்சொல் (**OTP**) அல்லது கடவுச்சொல் (**password**) என்பவற்றை ஒரு போதும் பகிர்ந்துகொள்ள வேண்டாம்

உங்களுடைய அட்டையிலுள்ள இலக்கத்திற்கு அழைப்பை ஏற்படுத்துங்கள்

எப்போதும் உங்களுடைய நிதியியல் ஒப்பந்தங்களில் சரியான அச்சுப்பிரதியை வாசியுங்கள்

உரிய காலத்திலான கொடுப்பனவுகள் உங்களுடைய கடன் நம்பகத்தன்மைப் புள்ளிகளை மேம்படுத்தும்

உயர்ந்த வருவாய், உயர்ந்த இடர்நேர்வு

அனைத்துச் சேமிப்புக்களையும் ஒரே இடத்தில் சேமிக்காதீர்கள்

நிதியியல் திட்டத்தினைக் கொண்டிருந்து அதனை நிறைவேற்றி நிதியியல் சுதந்திரத்தை அனுபவிக்கவும்

செலவு செய்வதற்கு முன் தேவைகளுக்கும் விருப்பங்களுக்குமான வித்தியாசத்தினை சிந்தியுங்கள்

வளரும் போது புத்திசாலியாக இருங்கள்

# மையத் தேர்ச்சிகளுக்கான கட்டமைப்பு

## எவ்வகையான இயலாற்றல்களை நாம் மேம்படுத்த வேண்டும்

மையத் தேர்ச்சிகளுக்கான கட்டமைப்பானது வழிகாட்டலின் முக்கிய கூறாகும். இது, நிதியியல் தேர்ச்சிகளுடன் முக்கிய நிதியியல் அறிவு உள்ளடக்கங்களை இணைக்கின்றது. அறிவாண்மை, திறன்கள், எண்ணப்பாங்கு மற்றும் நடத்தை என்பவற்றுடன் தொடர்புபடுகின்ற நிதியியல் இயலாற்றலின் பொதுவான வரைவிலக்கணங்களை இது பயன்படுத்துகின்றது. இவ்வரைவிலக்கணங்கள் அவர்களின் தனிப்பட்ட நிதிகள் பற்றிய தீர்மானங்களை மேற்கொள்ளும் போது இது வெளிப்படுத்துகின்றது.

அவர்களது நிதியியல் அறிவு தலையீடுகளை வடிவமைப்பதற்கு நிதியியல் அறிவு ஆர்வலர்கள் மையத் தேர்ச்சிகளுக்கான கட்டமைப்பை பயன்படுத்தலாம். இத்தலையீட்டின் மூலம் இலக்கு குழுக்களில் புகட்டுவதற்கு எமக்குத் தேவையான தேர்ச்சிகள் யாவை? அல்லது தலையீடு நிறைவடைந்ததும் அதன் தாக்கத்தை நாம் எவ்வாறு அதனைக் கண்காணித்து மதிப்பீடு செய்யலாம்?" போன்ற கேள்விகளுடன் மையத் தேர்ச்சிகளுக்கான கட்டமைப்பை நோக்குவது பொருத்தமானதாகவும் அமையலாம்.

எவ்வாறாயினும், நாட்டிலுள்ள அனைத்துக் குடித்தொகையினரும் பட்டியலிடப்பட்ட அனைத்துத் தேர்ச்சிகளையும் கொண்டிருக்கவேண்டுமென எதிர்பார்க்கப்படவில்லை. தனிப்பட்ட தேவைகள், கலாச்சார மற்றும் சமூக மற்றும் பொருளாதார பின்னணி போன்ற பல்வேறு காரணிகளைப் பொறுத்து, தனிப்பட்டரொருவரின் நிதியியல் நலனோம்புகைக்கு தேவையான தேர்ச்சிகள் வேறுபடலாம். ஆகையினால் வேறுபட்ட தனிப்பட்டவர்களைக் கொண்ட குழுக்கள் வேறுபட்ட தேர்ச்சிகளை வேண்டலாம்.

மையத் தேர்ச்சிகளுக்கான கட்டமைப்பானது ஒன்றிணைத்தல் அணுகுமுறையைப் பயன்படுத்தி தமது நிதியியல் அறிவு நடவடிக்கைகளின் உள்ளடக்கத்தை வடிவமைப்பதற்கு நிதியியல் அறிவு பணி வழங்குநர்களுக்கு அடிப்படை வழிகாட்டலொன்றை வழங்குகின்றது. எதிர்பார்க்கப்பட்ட நிதியியல் அறிவு பெறுபேறுகளின் வீச்சொன்றை இது எடுத்துரைக்கின்றது. மையத் தேர்ச்சிகளுக்கான கட்டமைப்பானது தற்போதைய தேர்ச்சிகளை கண்டறிவதற்கும் ஏற்கனவேயுள்ள நிதியியல் அறிவு முயற்சிகளில் காணப்படும் தேர்ச்சி இடைவெளியை அடையாளங்காண்பதற்கும் பயன்படுத்தப்படுகின்றது.

வழிகாட்டலின் மையத் தேர்ச்சிகளுக்கான கட்டமைப்பானது வயதுவந்தவர்களுக்கான மையத் தேர்ச்சிகளுக்களுக்கான கட்டமைப்பின் நிதியியல் வசதிக்குட்படுத்தலுக்கான கூட்டணியை[1] அடிப்படையாகக் கொண்டது. இது, கோட்பாட்டிற்கான அவசியப்படுத்தல் எழுகின்றவாறும் ஆர்வலர் தேவைப்பாடுகள் உருவாகின்றவாறும் மாற்றத்திற்கு ஆதரவளிக்கின்ற தொடர்ச்சியாக திருத்தியமைக்கின்ற ஆவணமாகும்.

வழிகாட்டலின் மையத் தேர்ச்சிகளுக்கான கட்டமைப்பென்பது பகிரங்கமாக கிடைப்பனவாகவுள்ள ஆவணமாகும்.

---

1 நிதியியல் வசதிக்குட்படுத்தலுக்கான கூட்டணியென்பது நாட்டில் நிதியியல் வசதிக்குட்படுத்தலை முன்னேற்றும் பொதுவான நோக்குடன் உறுப்பு மத்திய வங்கிகளாலும் நிதியியல் ஒழுங்குமுறைப்படுத்தல் நிறுவனங்களாலும் உரித்தாக்கப்பட்டு தலைமை வகிக்கின்ற கொள்கை தலைமைத்துவக் கூட்டணியொன்றாகும் www.afi@global.org.about

# கோட்பாடுகள் மற்றும் வழிகாட்டல்கள்

## நடைமுறைப்படுத்த முன்னர் நாம் எவற்றைக் கருத்திற்கொள்ள வேண்டும்?

தமது நிதியியல் அறிவு முன்முயற்சிகளை வடிவமைத்து நடைமுறைப்படுத்தும் போது பயன்படுத்துவதற்கு நாடு முழுவதுமுள்ள நிதியியல் அறிவு பணி வழங்குநர்கள் சில கோட்பாடுகளையும் வழிகாட்டல்களையும் அவர்களுக்கு வழங்குவது வழிகாட்டல் உருவாக்கத்தின் முக்கிய குறிக்கோள்களில் ஒன்றாக காணப்பட்டது. கோட்பாடுகளும் வழிகாட்டல்களும் உலகளாவிய பின்னணியில், நிதியியல் கல்வி முன்முயற்சிகளின் செயற்றிறன் வாய்ந்தவற்றை ஆராய்ச்சி செய்வதனூடாக பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

**நிதியியல் கல்விச் செய்திகளை தெரிவிப்பதற்கு பல்வேறு முறைகளையும் வழிகளையும் பயன்படுத்துதல்**

இச்செய்திகளின் உயர்வான சென்றடைவினையும் ஆற்றல்வாய்ந்த விதத்திலான உயர்வான தக்கவைத்தலையும் உறுதிசெய்யும்.

**கற்றலை நாளாந்த வாழ்கையினுள் ஒருங்கிணைத்தல்**

நிதியியல் கல்விச் செய்திகளையும் நடத்தையினையும் மக்களின் நாளாந்த வாழ்க்கைக்குள் புகுத்தல் ஆரோக்கியமான நிதியியல் பண்புகளை இயற்கையான விதத்தில் விருத்தி செய்வதற்கு உதவுகின்றது.

**நிதியியல் கல்வி வளங்கள் பயனர்-சிநேகமிக்கதாக காணப்படுகின்றன என்பதை உறுதிசெய்தல்**

அனைத்தையுமுள்ளடக்கிய வளங்களை கொண்டிருப்பது போதுமானதல்ல அவை மக்கள் பயன்படுத்துவதற்கும் அவற்றிலிருந்து அதிபயனைப் பெற்றுக்கொள்வதற்கும் இலகுவாக விளங்கிப் பயன்படுத்துவதாகவும் உள்ளுணர்வு சார்ந்ததாகவும் இருத்தல் வேண்டும்.

**தற்போதுள்ள நிதியியல் கல்வி வளங்களைப் பயன்படுத்த தூண்டுவதற்கும் ஆர்வத்தை நிலைநிறுத்துவதற்கும் விசேட முயற்சியை மேற்கொள்ளுதல்**

ஏதேனும் உற்பத்தியைப் போன்று, நிதியியல் கல்வி வளங்கள் ஊக்குவிக்கப்பட வேண்டும்.

---

மூலம்: உலக வங்கிக் குழு 2020, டிஜிட்டல் மற்றும் நிதியியல் அறிவுத் தலையீடுகள்: நாடு பற்றிய கள ஆய்வுகள்

**உங்களது இலக்குக் குழுக்களைப் பொறுத்து மரபுசார்ந்த அல்லது நவீன விநியோக முறைகளைத் தெரிவுசெய்தல்**

வயதில் மூத்தோர் போன்ற சில வாடிக்கையாளர் வகுப்புகளுக்கு, மரபார்ந்த கல்வி வழிகளைப் பயன்படுத்துதல் டிஜிட்டல் கருவிகள் மற்றும் பணிகளை எவ்வாறு பயன்படுத்தல் போன்ற புதிய அறிவு மற்றும் திறன்களை அவர்களுக்கு கற்பிப்பதற்கு சிறந்த வழியாக தென்படுகின்றது

**சுய அடையாளத்தையும் உணர்வுபூர்வமான இணைப்பையும் உருவாக்குதல்**

வாடிக்கையாளர்கள் தம்மை அடையாளங்கண்டு நிதியியல் கல்விச் செய்திகளை வழங்குகின்றவர்களுடனும் அவர்களின் சூழ்நிலைகளுடன் தொடர்புபடுபவர்களுடனும் உணர்வுபூர்வமான இணைப்புக்களை வளர்க்கும் போதும் நிதியியல் கல்வி சிறப்பாகவும் தொழிற்படுவதற்கு முனைகின்றது

**முக்கிய நிதியியல் கல்விச் செய்திகளை மீண்டும் மீண்டும் உருவாக்குதல்**

நிதியியல் கல்வி செய்திகள் வலியுறுத்தப்படாவிடின் முக்கியமானதாக இருந்தாலும் கூட உடனடியாக எடுத்துக்கொள்ளல் தக்கவைத்தலுக்கு உத்தரவாதமில்லாதிருக்கலாம்

**பொழுதுபோக்காக கற்பித்தல்**

சிறுவர்களுக்கும் இளையோருக்கும் நிதியியல் அறிவை அதிகரிப்பதற்கும் ஆரோக்கியமான நிதியியல் பழக்கவழக்கங்களை உருவாக்குவதற்கும் பொழுதுபோக்காகக் கற்றலென்பது விசேடமாக சக்தி வாய்ந்த கற்றறிதல் வழியாக அமையக்கூடும்

**உங்களுடைய தலையீடுகளை முழுமையானளவில் தொடங்குவதற்கு முன்னர் முன்னோடியாக அவற்றைப் பரீட்சித்தல்**

இது, விரும்பத்தக்க விளைவுகளை கொண்டிருக்காத தலையீடுகள் மீது வளங்களை விரயமாக்குவதிலிருந்து தடுக்கலாம்

**எதையேனும் தொடர்புபடுத்தல் புரிந்துணர்தல் அல்லது பயன்படுத்துதல் என பொருள்கோடலாகாது**

நிதியியல் கல்விச் செய்திகளுக்கான சாதகமான எதிர்வினையேற்றம் தாக்கமென்பது வாடிக்கையாளர்கள் அவற்றைப் புரிந்துகொள்கின்றனர் அல்லது புதிய நடத்தைகளை ஏற்றுக் கொள்கின்றார் என எப்போதும் பொருள்படுவதில்லை

**தாக்கத்தை எவ்வாறு மதிப்பீடு செய்வது பற்றி முன்கூட்டியே சிந்திக்கவும்**

நிதியியல் கல்வி தலையீடுகளின் தாக்கத்தைப் புரிந்துகொள்கையில் மதிப்பீடென்பது மிகமுக்கியமானதாகும். நேர்மையூடாக எண்ணப்படுகின்ற மதிப்பீட்டு கட்டமைப்பின்றி தலையீடொன்றின் பெறுபேறுகள் முழுமையற்றதாக இருக்கலாம்

# வழிகாட்டலின் நடவடிக்கைத் திட்டம்

## நாம் என்ன செய்யப்போகின்றோம்

வழிகாட்டலின் நடவடிக்கைத் திட்டமானது (நடவடிக்கைத் திட்டம்) அனைத்து நிதியியல் அறிவு ஆர்வலர்களின் ஒருங்கிணைப்புடன் வடிவமைக்கப்பட்டதுடன் ஒருங்கிணைக்கப்பட்டதும் ஒன்றிணைக்கப்பட்டதுமான விதத்தில் செயற்றிறன்மிக்கதாகவும் வினைத்திறன்மிக்கதாகவும் நடைமுறைப்படுத்துவதை நோக்காகக்கொண்டுள்ளது. வழிகாட்டலின் ஒவ்வொரு உபாய முன்னுரிமையின் கீழ் முன்கூட்டியே நிர்ணயிக்கப்பட்ட குறிக்கோள்களை அடைவதற்கு ஒவ்வொரு நடவடிக்கையும் கவனமாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

நடவடிக்கைத் திட்டத்தின் ஒவ்வொரு நடவடிக்கையும் கீழேயுள்ள தொழிற்பாட்டு தூண்களில் ஒன்றினுள் உள்ளடக்கப்படுகின்றது. இத்தகைய தொழிற்பாட்டு தூண்கள் அவை தலையீட்டுத்தன்மையின் அடிப்படையால் நடவடிக்கைகளை வகைப்படுத்துகின்றன.

ஆகையினால், பல உபாய முன்னுரிமைகளின் கீழான நடவடிக்கைகள் ஒரு தொழிற்பாட்டுத் தூணின் கீழ் வரலாம். தொடர்பான ஆர்வலர் நிறுவனங்களை உள்ளடக்கி ஒவ்வொரு தொழிற்பாட்டுத் தூணிற்குமென, ஆளுகைக் கட்டமைப்பின் அடிப்படை மட்டத்தில் தொழிற்படும் குழுவொன்று காணப்படும். மேலும், ஆர்வலர்களுடனான ஒருங்கிணைப்புடன் இணைந்து உருவாக்கப்பட்ட நிதியியல் அறிவு வழிகாட்டலையும் நடவடிக்கைத் திட்டத்தையும் நடைமுறைப்படுத்துவதற்கு ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திலிருந்து தொழில்நுட்ப மற்றும் நிதியியல் ஆதரவைப் பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.




வரைபடம் 4 - நிதியியல் அறிவு நடவடிக்கைத் திட்டத்தின் தொழிற்பாட்டுத் தூண்கள்

# தொழிற்பாட்டுத் தூண்கள்

### நாம் எவ்வாறு நடவடிக்கைத் திட்டத்தை நடைமுறைப்படுத்தவுள்ளோம்

## தொழிற்பாட்டுத் தூண் 01 - உள்ளடக்க விருத்தி மற்றும் ஒன்றிணைத்தல்


நாம் ஆரம்பத்தில் கலந்துரையாடப்பட்டதைப் போன்று, தமது சொந்த நோக்கங்களுக்கு வடிவமைக்கப்பட்ட பல்வேறு நிதியியல் அறிவு பொருட்களைப் பயன்படுத்துகின்ற இலங்கையில் பல்வேறு நிதியியல் பணி வழங்குநர்கள் காணப்படுகின்றனர்.

இந்நிதியியல் அறிவு பணி வழங்குநர்கள் வடிவமைப்பு மற்றும் விநியோக செயன்முறைக் காலப்பகுதியில் எத்தகைய முக்கிய பெறுபேறுகள் மற்றும் கருத்துக்கள் மீது அவர்கள் கவனத்தைச் செலுத்த வேண்டிய கொள்கை வழிகாட்டலை வழங்குவதன் மூலம் தமது நிதியியல் அறிவு தலையீட்டிற்குள் பல்வேறு அதிக முயற்சிகளையும் சக்தியையும் செலவிடுவதனால், நாம் அவர்களின் செயல்திறன்வாய்ந்த தன்மையை அதிகரித்து நிதியியல் அறிவுடைய இலங்கையை நோக்கிய பயணத்திற்குள் அவர்களை இணைத்துக்கொள்ளலாம். மறுபுறத்தில், வழிகாட்டலின் தேசிய மட்ட ஆர்வலர்கள் என வரும் போது, நாம் அவர்களை அவ்வாறே பின்பற்றாமல் தமது நிதியியல் அறிவு முயற்சிகளை ஒருங்கிணைக்கலாம் அல்லது ஒன்றிணைக்கலாம். நாம் ஆர்வலர்களுக்கிடையில் இணைந்து பணியாற்ற எதிர்பார்ப்பதுடன் அவர்களுடன் ஒன்றாகப் பணிபுரிவதற்கு அனுமதித்து தாக்கத்தை அதிகரிக்கின்ற அதேவேளை வினைத்திறனான வள ஒதுக்கீட்டையும் உறுதிசெய்யலாம்.

இத்தொழிற்பாட்டுத் தூணின் கீழான நடவடிக்கைகளானது வினைத்திறனாக ஒருங்கிணைப்பு மற்றும் ஒன்றிணைப்பு உள்ளடக்க உபாய முன்னுரிமையின் கீழ் வடிவமைக்கப்பட்ட நடவடிக்கைகளுடன் அநேகமாக ஒத்திசைவானதாக காணப்படும்.

உதாரணமாக, அனைத்து இலக்கு குழுக்களையும் உள்ளடக்குகின்ற ஊடகப் பிரச்சாரத்தில் பயன்படுத்துவதற்கு காணொளிகளையும் சமூக ஊடகப் பதிவுகளையும் நாம் உருவாக்கலாம். இதன்மூலம், அனைத்து ஆர்வலர்களும் புதிய உள்ளடக்கத்தை உருவாக்குவதன் மீது அவர்களின் வளங்களை விரயமாக்காமல் அவற்றைப் பயன்படுத்தலாம்.

மிக முக்கியமாக, நாட்டிலுள்ள அனைத்து நிதியியல் அறிவு பணி வழங்குநர்களுக்குமான வழிகாட்டலொன்றாக நாம் நிதியியல் அறிவு பாடவிதானத்தை உருவாக்கலாம். எனவே, தமது தேவைகளைப் பூர்த்திசெய்வதை உள்ளடக்குகின்ற எத்தகைய தமது தலையீடுகளை விநியோகித்து வடிவமைக்கவேண்டும் என அவர்கள் அறிவார்கள்.



# தொழிற்பாட்டுத் தூண் 01இன் கீழான முக்கிய தொழிற்படுகள்

## உள்ளடக்க விருத்தி மற்றும் ஒன்றிணைத்தல்

பொதுவான நிதியியல் அறிவு நாமத்தை உருவாக்குங்கள்

கிடைக்கக்கூடிய வளங்கள், ஆற்றல்வாய்ந்த இடைவெளிகள் மற்றும் ஒன்றுடன் ஒன்று இருப்பதைக் கண்டறிய, நிதியியல் அறிவு உள்ளடக்கத்தின் தற்போதைய சலுகையைப் பகுப்பாய்வு செய்தல்

உபாய முன்னுரிமைகள், முக்கிய உள்ளடக்க விடயப்பரப்புக்கள் மற்றும் இலக்குக் குழுக்களில் கவனம் செலுத்தும் நிதியியல் அறிவு தொடர்பான கையேடுகள் அல்லது தொகுதிகளை உருவாக்குதல் மற்றும் மேம்படுத்துதல்

பகிரங்கமாகக் கிடைக்கும் வளங்களைப் பயன்படுத்துவதற்கு அனைத்து ஆர்வலர்களுக்கும் பொதுவான மற்றும் எளிதில் அணுகக்கூடிய இ-தளத்தை நிறுவுதலும் இற்றைப்படுத்துதலும்

முகாமைத்துவ இளங்கலைமானிப் பட்டதாரிகளின் கட்டாய ஒப்படையொன்றாக நிதியியல் அறிவு சுய உதவி வழிகாட்டலைத் தொகுத்து அதனை இ-கற்றல் தளத்தில் வெளியிடுதல்

தேவையின் அடிப்படையில் ஆர்வலர் வழிகாட்டல் செயலமர்வுகளை நடத்துதல்

உள்ளடக்க விநியோகத்தின் நிலையானதன்மையை உறுதிசெய்யத் தேவையான பயிற்சியாளர்களுக்கான பயிற்சிகளையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் நடத்துதல்

நிதியியல் அறிவு ஆர்வலர்களால் பயன்படுத்தப்பட வேண்டிய முக்கிய செய்திகள் மற்றும் கல்வியின் தரம் ஆகியவற்றின் நிலையானதன்மையை உறுதிப்படுத்த வழிகாட்டுதல் மற்றும் நியமங்கள் உள்ளிட்ட வழிகாட்டல் புத்தகத்தை வெளியிடுதல்

“சான்றுபடுத்தப்பட்ட நிதியியல் அறிவு பயிற்றுவிப்பாளர்களை" உருவாக்குவதற்கான சான்றிதழை வழங்குவதன் மூலம், இலங்கையிலுள்ள நிதியியல் அறிவு பயிற்சியாளர்களின் தரநியமங்களையும் தொழில்சார் நன்மதிப்பையும் அதிகரிப்பதற்கு திட்டமொன்றை அறிமுகப்படுத்துதல்

## தொழிற்பாட்டுத் தூண் 02
## விநியோக வழி அடையாளப்படுத்தல் மற்றும் திருத்தியமைத்தல்

ஆர்வலர் ஆலோசனை அமர்வுகளின் போது நாம் பல நிதியியல் அறிவு ஆர்வலர்கள் தமது நாளாந்த தொழிற்பாடுகளுக்கு அவர்கள் பயன்படுத்தும் நன்கு நிறுவப்பட்ட வலையமைப்புக்களைக் கொண்டுள்ளனர் என நாம் அடையாளங்கண்டுள்ளோம். சில உதாரணங்கள் பின்வருமாறு:

- இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அலுவலகங்கள்
- சுகாதார அமைச்சின் சமூகம் சுகாதார வலையமைப்பு
- தமது வாடிக்கையாளர்களைச் சென்றடைவதற்கு பதிவுசெய்யப்பட்ட நிதியியல் பணி வழங்குநர்கள்
- பயன்படுத்தப்படும் குறுஞ்செய்திச் சேவைகள் மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சின் மகளிர் அபிவிருத்தி அலுவலர்களின் வலையமைப்பு
- வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் வெளிநாட்டு ஊழியர் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்
- கைத்தொழில் அமைச்சின் கீழ் தேசியதொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அதிகாரசபையின் **smeconnect.lk** தளம்
- பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், இலங்கை வங்கியாளர் நிறுவகம் மற்றும் இலங்கை காப்புறுதி நிறுவகம் போன்ற கல்வி நிறுவனங்கள்
- தொழில்கல்வி பயிற்சி நிறுவனங்கள்

இத்தகைய வலையமைப்புகள் நாடளாவிய ரீதியில் பரந்தளவான சென்றடைவை கொண்டிருப்பதுமட்டுமன்றி, எமது இலக்கு குழுக்கள் போதிய பெறுவழியினையும் கொண்டுள்ளன. எனவே, எமது நிதியியல் அறிவு உள்ளடக்கத்தை வழங்குவதற்கும் அவையோருடன் இணைவதற்கான விநியோக வழியாக நாம் இத்தகைய வலையமைப்புக்களைப் பயன்படுத்தலாம். இச்செயன்முறையானது நடைமுறைப்படுத்தல் செயன்முறையின் வினைத்திறனையும் செயற்றிறனையும் உறுதிசெய்து வளப்பயன்பாட்டை உச்சப்படுத்தும்.

வழிகாட்டலின் கீழ் நிதியியல் அறிவு விநியோக வழிகளாக பயன்படுத்துவதற்கு இவ்வலையமைப்புக்கள் உண்மையில் வடிவமைக்கப்படாத காரணத்தால், தலையீடுகளை உண்மையில் நாம் நடைமுறைப்படுத்த முன்னர் நாம் தற்போதுள்ள தன்மையைப் பகுப்பாய்வு செய்து ஏற்கனவேயுள்ள கட்டமைப்பிற்கு திருத்தியமைப்புக்களை அறிமுகப்படுத்தலாம்.

## தொழிற்பாட்டுத் தூண் 02இன் கீழான முக்கிய தொழிற்பாடுகள்

**விநியோக வழி அடையாளப்படுத்தல் மற்றும் திருத்தியமைத்தல்**

**நிதியியல் அறிவு முன்முயற்சிகளைச் செயல்படுத்துவதற்குப் பயன்படுத்தக்கூடிய தற்போதைய விநியோக வழிகள் மற்றும் வலையமைப்புக்களைக் கண்டறிந்து மாற்றியமைத்தல்**

**டிஜிட்டல் உள்ளடக்கங்கள் மற்றும் ஏனைய வாடிக்கையாளர் பாதுகாப்பு தகவல்களை (இணையதளங்கள், குறுஞ்செய்தி சேவைகள், சமூக ஊடகங்கள், செல்லிடத்தொலைபேசி பணச் செயலிகள் போன்றவை) பரப்புவதற்கு ஏற்கனவே உள்ள வழிகள் மற்றும் ஆதாரங்களைப் பயன்படுத்தவும்**

**நிதியியல் அறிவு உள்ளடக்கத்தைப் பரப்புவதற்கு வட்ஸ்அப், ரிக்டொக், இன்ஸ்டாகிராம் போன்ற புதிய சமூக ஊடக வழிகளை அறிமுகப்படுத்தி பயன்படுத்துதல்**

**தேசிய மாணவர் படையணி, தேசிய இளைஞர் படையணி போன்ற இளைஞர் ஈடுபாட்டுடன் கூடிய ஏனைய நிறுவனங்களுடன் ஆற்றல்வாய்ந்த ஒத்துழைப்புகளை நிறுவுதல்**

# தொழிற்பாட்டுத் தூண் 03
# தலையீட்டு வடிமைத்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல்

மேற்குறிப்பிட்ட இரண்டு தொழிற்பாட்டு தூண்களினுடாக இடப்பட்ட அடித்தளத்துடன், இலக்கு குழுக்களை உண்மையில் சென்றடையும் நிதியியல் அறிவு தலையீடுகள் இலங்கையர்களின் நிதியியல் நடத்தையை மேம்படுத்தும் நோக்குடன் உண்மை வாழ்க்கைப் பின்னணியாக வடிவமைத்து நடைமுறைப்படுத்தப்படும்.

இத்தலையீடுகளினூடாக, மூன்று உபாய முன்னுரிமைகளின் கீழ் அதாவது, மேம்பட்ட சாதகமான நிதியியல் நடத்தை, விழிப்பான மற்றும் பாதுகாக்கப்பட்ட நிதியியல் நுகர்வோர்கள் மற்றும் தலைமுறை ரீதியான நடத்தை மாற்றம் குறிக்கோள்களை அடைவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இந்நடவடிக்கைகள் வழிகாட்டலின் அனைத்து இலக்கு குழுக்களையும் உள்ளடக்குகின்றன. கடுமையாக இருக்கக்கூடும் என்பதால், நிதியியல் அறிவை வழங்குவதற்கு அப்பால், நாம் சில தலையீடுகளை அறிமுகம் செய்வதற்கான பொறிமுறைகளை எதிர்பார்க்கின்றோம். இவை, எமது இலக்குக் குழுக்களின் உண்மையான நிதியியல் நடத்தையைத் தூண்டுவதற்கான பயிற்றுவித்தலையும் பழக்கப்படுத்தலையும் உள்ளடக்குகின்றன.

## தொழிற்பாட்டுத் தூண் 03 கீழான முக்கிய தொழிற்பாடுகள்

### தலையீட்டு வடிவமைத்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல்

நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகள், பெண்கள் மற்றும் இளையோர் மீது விசேட கவனம் செலுத்தும் இலங்கையர்களின் நிதியியல் நடத்தையை மேம்படுத்துவதற்கு ஊடகப் பிரச்சாரமொன்றை நடாத்துதல் (கட்டம் கட்டமாக)

இலங்கையின் சமூகம் சார்ந்த சுகாதார வலையமைப்பினூடாக நிதியியல் பணிகளை மிகவும் நம்பிக்கையாகப் பயன்படுத்துவதற்கு இலங்கை மகளிரைப் பழக்கப்படுத்துவதுடன் வலுப்படுத்தல்

நிதியியல் முகாமைத்துவம் மற்றும் புதிய டிஜிட்டல் மாற்றல் தொழில்நுட்பங்கள் தொடர்பில் புலம்பெயர் தொழிலாளர்களையும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களையும் பழக்கப்படுத்துதல்

கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொள்வதற்கு கியூஆர் குறியீடுகளையும் செல்லிட பணச் செயலிகளையும் பயன்படுத்துவதன் நன்மைகள் தொடர்பில் முச்சக்கரவண்டி சாரதிகளுக்கும் வாடகை வண்டிச் சாரதிகளுக்கும் மத்தியில் கியூஆர் குறியீடுகளை அறிமுகப்படுத்தி ஊக்குவிக்கின்ற அதேவேளை நிதியியல் இயலாற்றல்களை அதிகரித்தல்

ஊடகவியலாளர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், உயர் வருமானம் கொண்ட இளையோர், பாதுகாப்புச் சேவையினர், நிதியியல் துறை தொழில்சார் நிபுணர்கள், ஓய்வுபெற இருப்பவர்கள் உள்ளடங்கலான அரச ஊழியர்கள் ஆகியோருக்கு குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சித்தொடர்களை நடாத்துதல்

அரச பதிவுசெய்யப்பட்ட பாடசாலைகளுக்கு தேசிய நிதியியல் அறிவு வாரத்தை/ தேசிய பண மாதத்தை அறிமுகப்படுத்தல்

முறைசார் கல்வி பாடவிதானத்திற்கும் (தொடர்ந்துசெல்லும்) தொழில் கல்வித் தகைமைகளின் முறைசார்ந்த பாடவிதானத்திற்கும் நிதியியல் அறிவை கட்டாயப் பாடமொன்றாக கூட்டிணைத்தல்

தேசிய மாணவர் படையணி, தேசிய இளைஞர் படையணி போன்ற இளையோர்களின் ஈடுபாட்டுடன் ஏனைய நிறுவனங்களுடனான கூட்டிணைப்பை நிறுவுதல்

## தொழிற்பாட்டுத் தூண் 04
## ஒருங்கிணைத்தல், கண்காணித்தல் மற்றும் மதிப்பிடுதல்

எந்தவொரு தேசிய மட்ட வழிகாட்டலும் வெற்றியடைய வேண்டுமெனில், அனைத்தயுமுள்ளடக்கிய, முன்னேற்றகரமான, மற்றும் நடைமுறைக்குச் சாத்தியமான ஒருங்கிணைப்பு, கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு கட்டமைப்பு என்பவற்றை செயற்படுத்தியிருத்தல் வேண்டும்.

இவ்வழிகாட்டல் அறிமுகப்படுத்தப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும் முதன்மை தேசிய உபாயத்தினை தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயத்தின் கீழ் அத்தகைய கட்டமைப்பொன்று ஏற்கனவே செயற்பாட்டிலுள்ளது. இவ்வாளுகைக் கட்டமைப்பு வினைத்திறனானதென நிரூபிக்கப்படுவதனால் இவ்வழிகாட்டல் தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாய ஆளுகைக் கட்டமைப்பிற்குள்ளும் கூட்டிணைக்கப்பட்டு தொடர்ச்சியாகக் கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு பயன்படுத்தப்படும். இதற்கமைய, இவ்வழிகாட்டலுக்கு வசதியளித்து நடைமுறைப்படுத்துவதற்கு தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயத்தின் ஏற்கனவேயுள்ள ஆளுகைக் கட்டமைப்பு விரிவாக்கப்பட்டு வலுப்படுத்தப்படும்.

இதற்கமைய, இவ்வழிகாட்டலின் அனைத்து தொழிற்பாட்டு தூண்களையும் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு இது நான்கு புதிய தொழிற்பாட்டு குழுக்களைக் கொண்டிருக்கும்.


தேசிய மட்ட முயற்சியொன்றை வெற்றியடையச் செய்யும் பொருட்டு, அனைத்து தேசிய மட்ட ஆர்வலர்களின் உயர்ந்த மட்டத்திலான ஆதரவு தேவைப்படுகின்றது. இதன் பொருள் அனைத்து ஆர்வலர்களும் தமது கொள்கை குறிக்கோள்களுடன் நிதியியல் அறிவை அணிசேர்ந்து தேசிய மட்ட தேவைப்பாடொன்றை முன்னுரிமைப்படுத்தவேண்டும்.

## தொழிற்பாட்டு தூண் 04 இன் கீழான முக்கிய நடவடிக்கைகள்

### ஒருங்கிணைத்தல் கண்காணித்தல் மற்றும் மதிப்பிடுதல்

- வழிகாட்டலை நடைமுறைப்படுத்தும் வகையில் வசதிப்படுத்துவதற்கு தேசிய நிதியியல் வசதிற்குட்படுத்தல் உபாயத்தின் ஏற்கனவேயுள்ள ஆளுகைக் கட்டமைப்பை விரிவுபடுத்தல்
- வழிகாட்டலை நடைமுறைப்படுத்துவதை ஒருங்கிணைப்பதற்கான வலுவான ஒருங்கிணைத்தல் பொறிமுறையொன்றினைத் தாபித்தல்
- தரவு சேகரிப்பதற்காக இணக்கமான மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட அணுகுமுறையை உருவாக்குதல்
- அனைத்து ஆர்வலர்களும் பயன்படுத்தக்கூடிய செயற்றிறன்மிக்க தாக்க மதிப்பீட்டு பொறிமுறையொன்றை/ கட்டமைப்பொன்றை அறிமுகப்படுத்தல்
- தலையீடுகளின் தாக்கத்தை அளவிடுவதற்கான நிதியியல் அறிவு அளவீட்டினை முன்னேடுத்தல்






வரைபடம் 5 - தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயத்தின் விரிவாக்கப்பட்ட ஆளுகைக் கட்டமைப்பு

**“நிதியியல் ரீதியாக அறிவுடைய
இலங்கையை நோக்கி”**



ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

பிரதேச அபிவிருத்தித் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

இல. 30 சனாதிபதி மாவத்தை
கொழும்பு 01, இலங்கை
www.rdd.cbsl.lk

IFC International Finance Corporation WORLD BANK GROUP

Australian Aid

United Nations
Development Programme
(UNDP)

UN Compound,
202-204, Bauddhaloka Mawatha,
Colombo 7,
Sri Lanka.